**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.489/2022**

**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | :சரவணன் | Caste | : |
| Father's Name | : குமரேசன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(01.07.2025)**

**முதல் விசாரணை**

நான் சிலைமானில் குடியிருந்து வருகிறேன். நான் மதுரை கிழக்கு தாலுாக அங்காடி மங்களம் என்ற ஊரில் கிராம நிர்வாக அலுவலராக வேலை செய்து வருகிறேன். சம்பவ சமயத்தில் நான் திருமங்கலம் தாலுகா, மேலக்கோட்டை கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணி செய்து வந்தேன். நான் மேலக்கோட்டையில் இருக்கும் போது அடையாளம் தெரியாத 60 வயதிற்கு மதிக்கதக்க ஆண் ஒருவர் ராயபாளையம் விலக்கு அருகே மேற்படி ஆண் நபர் மேற்கண்ட நான்கு வழிச்சாலையை கிழக்கிலிருந்து மேற்காக ரோட்டை கடக்கும் போது அரசு பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாக தகவல் தெரிந்து சம்பவ இடத்திற்கு இரவு 11.00 மணியளவில் சென்றேன். சம்பவ இடமானது ராயபாளையம் விலக்காகும். ஆனால் சம்பவ இடத்திற்கு நான் சென்று பார்த்த போது இரவு 11.00 மணியளவில் 2021 ம் ஆண்டு சென்று பார்த்ததேன். தற்போது தேதி, மாதம் எனக்கு ஞாபகம் இல்லை. சென்று பார்த்த போது விபத்தில் காயமடைந்த ஆண் நபரை 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக தெரியவந்தது. அவர் மீது மோதிய வாகனம் அரசு பேருந்து என தெரியவந்தது. சம்பவ இடத்தில் அந்த அரசு பேருந்து இருந்தது. மேற்படி அரசு பேருந்தை ஓட்டி வந்த நபரை நான் பார்த்தால் அடையாளம் காட்டுவேன். அந்த நபர் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. நான் காயம்பட்ட நபரின் போட்டோ கேட்டேன் அதை எங்களது வாட்ஸ் அப்

குரூப்பில் போட்டு காயம்பட்ட அந்த ஆண் நபரினை பற்றி விசாரித்தேன். ஆனால் எங்களால் கண்டுபிடிக்கமுடியவில்லை. சம்பவம் பற்றி நான் தாலுகா காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்டும் புகார் நான் கொடுத்தது தான். மேற்படி புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. விபத்தில் காயமடைந்த மேற்படி ஆண் நபர் திருமங்கலம் அரசு மருத்துவமனையிலிருந்த மேல் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு அங்கு சிகிச்சை பலனின்றி இறதுவிட்டதாக தெரிந்துக்கொண்டேன். எதிரியை அடையாளம் காண்பதற்காக முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.